**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 51/2016 தேதி: 02.06.2026**

**பி.வா.சா. 1 – மாரிச்செல்வம்**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் பழைய சர்வே எண். 137. புதிய சர்வே எண். 475/2 என்றால் சரிதான். வாதி வழக்கு சொத்திற்கு கிழக்கே 1ம் வாதியின் உடன்பிறந்த சகோதரர் சங்கரப்ப நாயக்கர் இடம் என்றால் தெரியாது. என்னுடைய இடம் சங்கரப்ப நாயக்கர் இடத்திற்கு வடக்கே உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1ல் சங்கரப்ப நாயக்கர் இடத்திற்கு வடக்கே என்று தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சங்கரப்ப நாயக்கர் மேற்படி இடத்தை கமலம் அண்ணி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சங்கரப்ப நாயக்கரின் சரியான பெயர் சிவசங்கர நாராயண நாயக்கர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதி வழக்கு சொத்தில் எனக்கு எந்தவித பாத்தியமும் கிடையாது. வாதி தாவா சொத்திற்கு வடக்கே உள்ள எனது சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து வாதிக்கு தீர்ப்பாவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல. ஆட்சேபணை உள்ளது. என்ன ஆட்சேபணை உள்ளது என்றால் என்னுடைய இடத்திற்கு தெற்கே வாதியின் இடம் உள்ளதாக சொல்லியுள்ளார். ஆனால் அந்த சொத்திற்கு ராமமூர்த்தி வகையறா மற்றும் பரமசிவம் நாயக்கர் வகையறா பெயரில் நான்கு பட்டாக்கள் போடப்பட்டுள்ளது. அந்த பட்டாவினை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரச்சனை செய்து கொண்டிருப்பதால் தாவா சொத்திற்கு யார் பெயரிலும் பட்டா ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புல எண். 475/2 க்கு வாதியின் பெயரில் பட்டா மாற்றம் செய்ய 2010 லே வருவாய் துறையினர் பரிந்துரை செய்தார்கள் என்றால்

அவ்வாறு தான் கேள்விப்பட்டேன். நான் பிரச்சனை செய்வதால் தான் வாதி பெயரில் தற்போது வரை பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வாதியின் உறவினர் பெயருக்கு பட்டா போடப்பட்டுள்ளது என்ற விபரத்தினை எனது எதிர் வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வா.சா.ஆ 1 மூலம் 1ம் வாதிக்கு தகப்பனாரை பெற்ற பாட்டியான லட்சுமியம்மாள் என்பவரால் 30.10.1949 ல் கமலம் அண்ணி என்பவரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தற்போது வழக்கு தாக்கல் செய்த பின்னர் தெரியும். பத்திரத்தின் நகலை நீதிமன்றத்தில் வாங்கி பார்க்கவில்லை. அதனால் பத்திரத்தில் தாவா சொத்து உள்ளதா என்று எனக்கு தெரியாது. சங்கரலிங்க முதலியார் யார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வடக்கே உள்ள சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் எனது தகப்பனார் 1967 ல் கிரையம் பெற்ற சொத்து. அந்த பத்திரத்தை பி.வா.சா.ஆ 1 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ல் தாவா சொத்து எதுவும் சேரவில்லை என்றால் சரிதான். 1ம் வாதியை பெற்ற லட்சுமியம்மாளுக்கு 5 வாரிசுகள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதில் முதல் மகன் முத்துமல்லு தனது பிரிவினை இல்லாத 1/5 பங்கினை 1ம் வாதி அடைந்துவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வம்சாவழியில் கண்ட ராமசாமி, கண்ணன் என்பவர்கள் 1ம் வாதியின் மனைவியான 2ம் வாதிக்கு அவர்களது பங்கினை கொடுத்துவிட்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர்களது மற்றொரு வாரிசுகளான குருசாமியும், நாராயணசாமியும் மற்றொரு வாரிசான கண்ணன் என்பவருக்கு தங்களது பங்கினை 2002 ல் கிரையம் கொடுத்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. கண்ணன் இறந்த பிற்பாடு அவரது மனைவியான 3ம் வாதி அவர் பாகத்தினை அடைந்து அனுபவித்தும் மொத்த சொத்தினை வாதிகள் அடைந்துள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்து ஆக்குபைடு நத்தம் காலி மனை என்றால் சரிதான். நத்தம் காலி என்பதால் பட்டா கொடுக்கப்படவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எனக்கு எந்தவித பாத்தியம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அளவீடு செய்யும் போது நான் உடன் இருந்தேன். ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் கண்டுள்ள நான்குமால் மற்றும் அளவீடுகள் சரியாக தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே உள்ள சொத்தை எனது தகப்பனார் 1967 ல் கிரையம் பெற்று எனக்கு பி.வா.சா.ஆ 2 மூலம் உயில் எழுதிக்கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ 2 லில் சொத்து விபரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அவரது பெயரில் உள்ள மொத்த சொத்துக்களையும் குறிப்பிட்டுள்ளார். உயிலில் சாட்சி கையெழுத்து செய்தது யார் என்றால் முனியாண்டி மற்றொரு யார் என்று நபர் ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ 2 ன் அசல் வங்கியில் உள்ளது. பி.வா.சா.ஆ 2 ல் தாவா சொத்து சேர்க்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 5 முதல் பி.வா.சா.ஆ 8 வரை பட்டாக்களுக்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தம் உள்ளது. மேற்படி பட்டாக்களில் தாவா சொத்திற்கான புல எண் 475/2 குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி பட்டாக்கள் தாவா சொத்திற்கானது அல்ல என்றால் சரிதான். மேற்படி பட்டாக்கள் தாவா சொத்திற்கு வடக்கே உள்ள எனது சொத்திற்கான பட்டாக்கள். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் படி உட்பிரிவு செய்து வாதிகள் பெயரில் பட்டா ஏற்படுத்திக்கொள்ள எனக்கு ஆட்சேபணை இல்லை. தாவா சொத்திற்கு வடக்கே உள்ள சொத்து எனது தந்தை கிரையம் பெற்ற சொத்து தான் பின்பு எதற்காக அரசாங்கத்திடம் இருந்து இலவச ஒப்படைப்பு பட்டா பெற்றேன் என்றால் எனது அப்பாவின் இரண்டு மனைவிகள் என்பெயர் மற்றும் எனது மனைவி பெயரில் பட்டா பெறவேண்டும் என்பதன் அடிப்படையில் பட்டா பெற்றேன். தாவா சொத்திற்கு தெற்கே உள்ள சொத்தை எனது அப்பா கிரையம் பெற்றிருந்தாலும் நத்தம் காலி இடம் என்று

வகைபாடு செய்யப்பட்டதால் அரசாங்கத்தில் பட்டா கொடுக்கமாட்டார்கள் என்பதால் அரசாங்கத்திடம் இருந்து இலவச ஒப்படைப்பு பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சொந்தமாக நிலம் இருந்தாலும் நான் அரசாங்கத்தை ஏமாற்றி இலவச ஒப்படைப்பு பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்திற்கும் வாதியின் சித்தப்பாவான சங்கரப்ப நாயக்கர் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட இலவச பட்டா பெற்றுள்ளார் என்றால் பட்டா பெற்றுள்ளார் என்ன பட்டா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தை சுற்றியுள்ள இடம் நத்தம் காலி மனை என்பதால் அனைவரும் பட்டா பெற்றுவிட்டார்கள் என்றும், நான் பிரச்சனை செய்வதால் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 5 முதல் பி.வா.சா.ஆ 8 வரை உள்ள பட்டாக்கள் மற்றும் ஆணையர் வரைபடத்தில் தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள இடங்களான 475/26, 475/27, 475/28, 475/29, 475/30 இவை அனைத்துமே புல எண். 475/2 ல் பிரித்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் உரிமையும், அனுபவமும் எனக்கு கிடையாது என்றும், நான் தொடர்ச்சியாக பிரச்சனை செய்து கொண்டு இருப்பதால் தான் வாதிகள் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.